**ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி - 2022**

-----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 90,645,552 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்களில் 785 விடயங்கள் கம்பனியால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்த | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது உரிய சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றமையால் அதற்காக ஏற்படுகின்ற கிரயங்கள், காலம் மற்றும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதால் நிறுவனத்திற்கு கிடைக்கின்ற பொருளாதார நலன்களை கவனத்திற் கொண்டு இந்த பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் நியாயமான பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதியை சமர்ப்பிப்பதற்காக சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதி மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களைச் சீராக்கும் போது ஏனைய பெறவேண்டியவைகள் ரூபா 1,169,797 இனால் அதிகரித்தமை காசு வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடுப்படுவதற்குப் பதிலாக ரூபா 6,935,760 காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 8,105,557 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் சீராக்கத்திற்காக முற்செலுத்தப்பட்ட வரி சீராக்கங்கள் மேற் கொள்ளப்பட்டமையால் அது காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசுப் பாய்ச்சல் சரியாகக் காண்பிக்கின்ற வகையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மணல் இருப்பு தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொண்டு பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 16,738,596 ஆக காண்பிக்கப்பட்ட மணல் இருப்பின் பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் போது கந்தளாய் மணல் செயற்திட்டத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 10,603,916 இருப்பு பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தில் காணப்பட்ட | சகல செயற்திட்டங்களினதும் இருப்பு மீதியை உறுதிப்படுத்தி மாதாந்தம் கணக்குகள் பிரிவிற்கு அறிக்கையிடப்படுகின்றது. இதன் பிரகாரம் 2022.12.31 இல் இருப்பு மீதிகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டுள்ளது. ஏதாவது சந்தர்ப்பமொன்றில் இருப்பு மீதியில் கவனத்தில் கொள்ளக்கூடிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அது தொடர்பாக நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பொறுப்பிற்கு கடப்பாடுடையவர். | இருப்பு பௌதீக மெய்மையாய்வு செய்து இருப்புக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3658 கியூப் மணல் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் அரசிறை செலவினம் ரூபா 12,800,273 குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக இலாபமும் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அரசிறை செலுத்தப்பட்டுள்ள கியூப்களின் எண்ணிக்கை மற்றும் அகழப்பட்ட கியூப்களின் எண்ணிக்கைகளில் வேறுபாடுகள் ஏற்பட முடியும். அகழ்வு அனுமதிப்பத்திரம் ஒரு காலப்பகுதிக்கு உரியதாக வழங்கப்பட்டமையும், கணக்குகளுக்காக கணக்காண்டிற்குரிய அகழ்வாக கணக்காண்டிற்குரிய கியூப்களின் எண்ணிக்கை அறிக்கையிடப்படுகின்றமையு ம் இந்த வேறுபாட்டிற்குக் காரணமாக இருந்தது. | அகழப்பட்ட அளவினை அடிப்படையாகக் கொண்டு சரியான அரசிறை கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலவினம் கூட்டுமொத்தமாக ரூபா 284,229 குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக இலாபமும் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் EPF, ETF சரியாக செலுத்தப்பட்டுள்ளதுடன் மேற்கொள்ள வேண்டிய மிகை ஒதுக்கீடுகள் சரிசெய்தல் நடப்பாண்டின் EPF, ETF செலவினங்களில் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது. | மீளாய்வாண்டிற்குரி ய செலவினங்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியால் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய மற்றும் அந்த | இந்த மீதி 2023 இன் நிதியாண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது சில மீதிகள் | 02 நிறுவனங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பணியகத்திலிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதிகள் முறையே ரூபா 44,351,804 மற்றும் ரூபா 1,545,522 ஆக இருந்த போதிலும் பணியகத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்திலிருந்து செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 71,711,804 மற்றும் ரூபா 9,142,975 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முறையா ரூபா 27,360,000 மற்றும் ரூபா 7,597,453 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | 2022 இன் நிதி அறிக்கைகளில் தீர்க்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | ரூபா 39,097,154 ஆன வர்த்தக பெற வேண்டிய மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 15,897,962 கூட்டுத்தொகையான 180 மீதிகள் காணப்பட்டது. இந்த மீதிகளை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 15 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வர்த்தக பெறவேண்டிய மீதிகளுக்காக கம்பனியின் நிதிச் சொத்துக்கள் மற்றும் கொள்கைகள் தாய் நிறுவனமான புவிச்சரிதவியல் அய்வு மற்றும் சுரங்க பணியகத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 6,686,025 மீதி தொடர்பாகவும் கவனத்தில் கொண்டு அந்த முழுமையான மீதியும் அறவிட முடியாக் கடனாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கடனை அறிவிடுதல் நிச்சயமற்ற நிலைமை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிறுவனம் பொதுவாக அறவிட முடியாக் கடன் ஒதுக்கக் கொள்கை தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதிகளுக்காகவும் பின்பற்றப்படுகின்றது. 2022.12.31 இல் உள்ளவாறு பணியகத்தால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படாத, கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட மீதிகள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடனை அறவிடல் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்று அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010-2022 காலத்தில் பல்வேறு சேவைகளை வழங்கியதற்காக நிறுவனம் மற்றும் நபர்களுக்கு 222 பேர்களினால் கூட்டுமொத்தமாக ரூபா 24,456,546 ஆன முற்பணம் கம்பனிக்கு செலுத்தப் பட்டிருந்ததுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,326,538 ஆன 84 முற்பணங்கள் காணப்பட்டது. இந்த முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெறப்பட்ட முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 648,000 ஆன மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய மற்றும் விடுவிக்கக்கூடிய சகல கேள்வி பிணைகளும் இந்த காலாண்டின் போது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றிக்கையின் 11 ஆம் பந்தி | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்காள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது பிரதான அலுவலகம் மற்றும் செயற்பாட்டிலுள்ள சகல செயற்திட்டங்களினதும் சொத்துக்களை மெய்மையாய்வு செய்து அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 செப்படம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் 02/2013 என்ற பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 25,944,060 ஆன செலுத்த பணிக்கொடை தொகை காணப்பட்ட போதிலும் அந்தப் பணம் சுற்றறிக்கை | சில அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் நிறுவனத்தின் சிறிய அளவிலான ஊழியர் எண்ணிக்கை காணப்படுகின்றமையினால் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணிக்கொடைகள் தனிப்பட்ட கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்பாடுகளின் பிரகாரம் தனியாக கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக தனியான முதலீடு ஒன்றை மேற்கொள்வதற்கான தேவை காணப்படவில்லை. | |
| (இ) | 2014 சனவரி 06 ஆம் திகதி இலக்கம் 01/2014 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகள். | ஊழியர்களுக்கு செலுத்த முடியுமான மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 7,800 ஆக இருந்த போதிலும் கம்பனியால் 2015 ஆம் ஆண்டு முதல் 8,800 தொகை வீதம் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் ரூபா 2,180,000 மீளாய்வாண்டில் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிக செலுத்துதல்களை அறவிடுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் ஊழியர்களில் ஆகக் குறைந்த சம்பளம் ரூபா 15,000 இல் வைத்தல் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படியை ரூபா 2,200 இனால் அதிகரிக்குமாறு கோரி பணிப்பாளர் சபைக்கு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் 2015.01.02 ஆம் திகதி அனுப்பப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தில் வழங்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் 2015.01.01 ஆம் திகதி முதல் நிறுவனத்தின் ஊழியர்களுக்காக தற்போது செலுத்தப்படுகின்ற வாழ்கைச் செலவுப் படி ரூபா 2,200 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலதிக செலுத்துதல்கள் உடனடியாக அறவிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 72,708,801 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 11,509,597 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 61,199,204 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அகழ்வு செயற்றிட்டம், விஷேட செயற்திட்டம் மற்றும் மனிதவள கையளித்தல் செயற்திட்டங்களிலிருந்து உழைக்கப்பட்ட தேறிய வருமானம் கூட்டுமொத்தமாக ரூபா 25,607,718 இனால் குறைவடைந்திருந்த போதிலும் மணல் விற்பனை செயற்றிட்டத்திலிருந்தும், புவியியல் ஆய்வு செயற்றிட்டத்திலிருந்தும் உழைக்கப்பட்ட தேறிய வருமானம் முறையே ரூபா 55,177,322 மற்றும் ரூபா 25,933,730 இனாலும், செயற்பாடல்லாத வருமானம் ரூபா 18,486,258 இனாலும் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கந்தளாய் மணல் அகழ்வு மற்றும் ஆற்றங் கரை பாதுகாப்பு செயற்திட்டம்.<br><br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) கந்தளாய் பிரதேச செயலக பிரிவில் சூரியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகாவலி ஆற்றின் பாதுகாப்பு அணைக்கு அச்சுறுத்தலாக படிந்திருக்கும் 103,128 கியூப் அளவான மணல் படிவை அகற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை மகாவலி அதிகார சபையால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களின் போது இந்த இரு தரப்பினருக்குமிடையில் காணப்பட்ட உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 20 ஆம் திகதி முதல் 2022 யூலை 19 ஆம் திகதி வரை இறுதித் தடவையாக இந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிறுத்தப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பித்த 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி அளவில் 46306.04 மணல் கியூப்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் 2022 | உரிய ஒன்றிணைந்த குழு 2023.02.20 ஆம் திகதி கந்தளாய் சூரியபுர மகாவலி அலுவலகத்தில் கூட்டப்பட்டிருந்ததுடன் அதன் போது கம்பனியின் புள்ளிவிபர ரீதியல் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் புள்ளி விபரங்கள், ஒன்றிணைந்த விவசாய சங்கங்களின் புள்ளிவிபரங்களும் முழுமையாக சமனாக காண்பிக்கப்பட்டதுடன் மகாவலி அதிகார சபையினால் பேணிச்செல்லப்பட்ட புள்ளிவிபரங்களில் மாத்திரம் வேறுபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வேறுபாடுகள் தொடர்பாக இறுதி முடிவுக்கு வராதிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | மணல் அளவின் பற்றாக்குறை தொடர்பாக பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பெப்ரவரி - யூலை காலப்பகுதியில் 9839 கியூப் மணல் அகழப்பட்டிருந்தமையும் அந்த அளவு மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தமையும் கம்பனியின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. கந்தளாய் சூரியபுர மகாவெலி அதிகாரசபை பிரிவு அலுவலகத்தின் அறிக்கைகளின் பிரகாரம் 2022 யூலை வரையான காலப்பகுதியில் 10,162.25 மணல் கியூப்கள் அகழப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 323.25 கியூப் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை ரீதியான வேறுபாடுகள் ஒன்றிணைந்த குழுவின் மூலம் பரீட்சித்து அறிக்கை வழங்க வேண்டும் என 2022 செப்டம்பர் 02 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபையின் சூரியபுர கந்தளாயில் நடைபெற்ற செயற்றிட்டத்தின் செயல்முன்னேற்றக் கலந்துரையாடல் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டடிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட மணல் அகழ்வு செயற்றிட்டத்தின் கீழ் மணல் கொள்வனவாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற புனரமைப்புத் தொகையில் ரூபா 168,254,363 இற்கு மகாவெளி ஆற்றில் 03 அரிப்பு தடுப்புக்களை நிர்மாணிப்பதற்கு கம்பனி திட்டமிட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்த அரிப்பு தடுப்புக்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,109,058 விவசாய சங்கங்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு அரிப்பு தடுப்பு மாத்திரம்

அரிப்பு தடுப்புக்களை நிர்மாணிக்கும் செயல் முன்னேற்றம் தொடர்பாக இணங்குகின்றோம். மிகுதி பகுதிகளையும் பூர்த்தி செய்வதற்கு தேவயான நிதி தற்போது சந்தையின் நிலமைகளை கவனத்தில் கொண்டு அண்ணளவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களின் போது செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளில் தவிர்க்கமுடியாத காரணங்களின் அடிப்படையில் இடையில் நிறுத்த வேண்டியேற்படுகின்றமையினால் தேவையான செயல் முன்னேற்றத்தை அடைந்து

செயற்றிட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வெள்ள நிலைமைகளின் போது கரையோரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மிகுதி 02 அரிப்பு தடுப்புக்களையும் நிர்மாணித்தல் செயல் முன்னேற்றம் 70 சதவீதம் மற்றும் 54 சதவீதமாக இருந்தது. இந்த அரிப்பு தடுப்புக்களை நிர்மாணிப்பதன் உடன்படிக்கைக் காலம் தற்போது விஞ்சியிருந்ததுடன் 02 அரிப்பு தடுப்புக்களினதும் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக மேலும் முறையே ரூபா 29,807,352 மற்றும் ரூபா 38,410,355 தொகை தேவையாக இருந்தமை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த 02 அரிப்பு தடுப்புக்களினதும் வேலை பூர்த்தி செய்யப்படாமையினால் வெள்ள நிலைமைகளின் போது மகாவலி ஆற்றின் கரையோரத்திற்கு பாதிப்பு ஏற்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொள்வதற்கு வசதியீனமாக இருந்தது. இது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் உடன்படிக்கை செய்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து 2022.09.02 ஆம் திகதி ஒன்றிணைந்த குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்படுகின்ற அறிக்கைகள் இருதரப்பினருக்கும் மகாவலி அதிகார சபை வழங்கியிருந்த போதும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இதுவரை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (iii) | 2022 யூலை 10 ஆம் திகதி முதல் இந்த செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் நீடிக்கப்படாதிருக்கும் போது 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,977,062 ஆன சம்பளம், படிகள், வீட்டு வாடகை, அலுவலக செலவினங்கள் போன்ற பயனற்ற செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை மிகவும் விரைவாக பூர்த்தி செய்தல் நிறுவனத்தினது தேவையாக இருந்தமையால் விரைவாக ஆரம்பிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதனால் செயற்திட்டத்தின் ஆரம்ப செலவினங்களை பதிவழித்தல் தொடர்பாக குறித்துரைத்த தீர்மானம் எடுத்தல் வசதியீனமாக இருந்தது. | செயற்திட்டத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதா? என்பது தொடர்பாக விரைவாக தீர்மானம் எடுக்க வேண்டி இருந்ததுடன் செலவினங்களைச் செய்யும் போது சரியான திட்டமிடலுடனும், பொருளாதார ரீதியாகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **கொட்டிகம்பொக்க பளிங்கு படிவு அகழ்வு செயற்திட்டம்** | | |
| (i) | 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட இந்த செயற்திட்டத்தின் அகழ்வு நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 15 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்படா | சுற்றாடல் அறிக்கையின் அங்கீகாரம் தாமதமடைந்தமையால் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டதற்கு காரணமாக இருந்ததுடன் 2022 ஒக்டோபர் | செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருந்ததுடன் அளவிடல் நடவடிக்கைகள், நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஊழியர் சம்பளம் செலுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 22,528,495 பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது. | மாதத்தில் அது வழங்கப்பட்டிருந்தது. மேலும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவொன்று சுற்றாடல் அமைச்சினால் இதுவரை நியமிக்காதிருந்ததுடன் இந்த குழு பளிங்குகளை விற்பனை செய்யும் முறைமை மற்றும் விலைகள் தீர்மானித்து எமது நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும். | |
| (ii) | மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக 2017 மார்ச் மாதம் ரூபா 2.2 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட பாலம் தராசு (Weigh bridge) பயனற்ற சொத்துக்கு உட்பட்டிருந்தது. இந்த சொத்து அளவுத்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது உரிய வழங்குனர் கம்பனிக்கு ரூபா 105,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது தராசின் இலத்திரனியல் துணைப் பாகங்கள் கம்பனியினால் அகற்றப்பட்டிருந்தது. | தற்போது பாலம் தராசின் பாதுகாப்பிற்காக இரவு காவலாளி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அந்த தராசைக் கழற்றி அகற்றுதல் தொடர்பாக நடவடிக்கை முடிவடைந்தவுடன் அந்த செலவினங்களும் நிறுத்தப்படும்.<br><br>வருடாந்த அளவுத்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது உரிய கம்பனிக்கு ரூபா 105,000 தொகை செலுத்தப்பட்ட போதும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அந்த ஆண்டின் போது அமுல்படுத்த முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் அது தொடர்பாக உரிய கம்பனிக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அளவுத்திட்டத்தை நிறுத்துவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய இலத்திரனியல் துணைப் பாகங்கள் அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | தராசின் இலத்திரனியல் துணைப் பாகங்கள் தராசை கொள்வனவு செய்த நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) **கெல்சைட் செயற்திட்டம்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொட பிரதேச செயலகப் பிரிவில் ரஜவக்க ஒதுக்கப் பிரதேசத்தில் காணப்பட்ட கெல்சைட் படிவு அகழப்பட்டு பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதற்கும், உள்நாட்டு சந்தைக்காகப் பயன்படுத்துவதற்கும் நோக்காகக் கொண்டு செயற் திட்டத்தை மேற்கொள்வதற்காக

| | | |
|---|---|---|
| கம்பனியால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. | | |
| (i) அதன் பட்டப்பின் விஞ்ஞான பட்டப் படிப்பு நிறுவனத்தால் கம்பனிக்காக தாயரிக்கப்பட்ட 2020 யூலை 10 ஆம் திகதிய செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் நோக்கங்களில் உத்தேசிக்கப்பட்ட அகழ்வு பிரதேசத்தில் விரிவான புவியியல் ஆய்வு வரைபடத்தைப் பூர்த்தி செய்தல், படிவில் அகழக்கூடிய கெல்சைட் அளவு மற்றும் படிவில் ஏனைய கனிப்பொருள்களை மதிப்பிடுதல் போன்ற நோக்கங்கள் கம்பனியால் சேவைப் பங்களிப்பாளர்களுக்கு வழங்குகின்ற சேவையாக இருந்ததுடன் கம்பனியின் இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கும் இணங்குதல் வேண்டும். அதனால் அந்த பணிகளை கம்பனி நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் போது வேறு நிறுவனத்திற்கு கையளித்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | இந்த புவியியல் ஆய்வு மற்றும் நில வரைபடத்திற்காக படிவுகள் மற்றும் கனிப்பொருட்கள் நிபுணர்களின் உதவி தேவையான நிறுவனமாக இருந்ததுடன் நிறுனத்தில் இந்த விஷேட நிபுணர்களின் அறிவுடன் உள்ள நபர்கள் காணப்படாமையினால் பேராதனைப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உதவி இந்த ஆய்விற்காக பெறப்பட்டிருந்தது. இந்த ஆய்விற்காக தேவையான உதவி நிறுவனத்தில் இருக்கின்ற புவியியல் விஞ்ஞானிகள் மற்றும் உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் நடவடிக்கைகளின் மூலம் நிறைவேற்றக்கூடிய பணிகள் அதன் மூலம் இயலுமான வரை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ii) பட்டப்பின் படிப்பு விஞ்ஞான நிறுவனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் புவியியல் ஆய்வு வரைபடம் மற்றும் அகழக்கூடிய கெல்சைட் அளவினைத் தீர்மானிப்பதற்காக ரூபா 2,727,500 தொகையும், உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக ரூபா 1,275,000 தொகையும், சிரேஷ்ட விஞ்ஞானிகள், ஆலோசனையாளர்களுக்குச் | ஒட்டுமொத்தப் படிவிலும் காணப்படுகின்ற கெல்சைட் அளவைத் தீர்மானிப்பதற்காக விஞ்ஞான ரீதியான ஆய்வொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த படிவுகளுக்காக அதிக தொகையொன்றை செலவிட வேண்டியிருந்தமையால் படிவில் காணப்படுகின்ற ஒட்டுமொத்த கெல்சைட் அளவையும் தீர்மானிக்க முடியாதிருந்தது. | பயனற்ற செலவினங்களை செய்தல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதற்காக ரூபா 400,000 தொகையும், ஆராய்ச்சி மானியம் ரூபா 2,793,000 தொகையும் ஆக மொத்தக் கிரயம் ரூபா 7,195,500 ஆகும். 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக கம்பனி ரூபா 3,349,106 செலவிட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 சனவரி 25 வரையிலும் அகழக்கூடிய கெல்சைட்டின் அளவு தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | கெல்சைட் சார்ந்த உற்பத்திகளுக்காக தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக நீண்டகால வாடகை அடிப்படையில் காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கு கல்தொட்டப் பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கப் பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்த ரஜவக்க ஒதுக்க பிரதேசத்தில் அமைக்கப்பட்டமையால் உரிய கோரிக்கைக்காக பிரதேச செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைகளுக்காக தேவையான காணியினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு அதற்குரிய நடவடிக்கைகளுக்காக அறிவிக்கப்பட்டுள்ளமை கல்தொட்ட பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை திட்டமிடும் போது செயற்திட்டத்திற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக ஆரம்பமாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (iv) | இந்த அகழ்வு செயற்திட்டத்திற்காக 2009 இன் 66 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 30(ஈ) பிரிவின் பிரகாரம் சுற்றாடல் விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் காணி விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இந்த திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் பெற வேண்டிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (v) | கெல்சைட்டை பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்காக உரிய | கழிவுப் பொருளாக கனிசமான அளவு அகற்றப்பட்டுள்ள இந்த கனிப்பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கும் மற்றும் | கம்பனி இவ்வாறான செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கங்களை |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசத்தில் அமுல்படுத்தப்படுகின்ற தனியார் கெல்சைட் அகழ்வு செயற்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டு குவிக்கப்பட்டுள்ள கெல்சைட் அடங்கிய கனிப்பொருள் மூலப்பொருட்களை பயன்படுத்துவதற்கு கம்பனி பின்னர் திட்டமிட்டிருந்தது. எனினும் பலாங்கொடை பிரதேசத்தில் தற்போது செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்ற தனியார் கெல்சைட் அகழ்வு அனுமதி பத்திரங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்தமை புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் தகவல்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தை திட்டமிடும் போது இந்த சேதங்களை கழிவுகளை வழங்குகின்ற வழங்குனர் யார் என்பது தொடர்பாகவும் கண்டறிய கூடிய முறை தொடர்பாகவும் மற்றும் அந்த கழிவுகளை கம்பனிக்கு வழங்குதல் யார் என்பது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடலை புனரமைக்கும் செயற்பாடுகளாக இந்த மூலப் பொருட்களை பயன்படுத்துவதற்கு கம்பனி பின்னர் திட்டமிட்டிருந்தது. ஆரம்ப செயற்திட்ட முன்மொழிவு திட்டத்தின் பின்னர் இந்த அகற்றப்பட்ட கனிப்பொருள் நியாயமானதாக தோன்றுமாயின் வழங்குனர்களை தெரிவு செய்தல் மற்றும் வழங்க கூடிய அளவை தீர்மானிப்பதற்கும் அதன் போது முடியாது இருக்குமாயின் கம்பனியினால் அகழ்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | தெளிவில்லாமல் இருந்தமையினால் செயற்திட்டத்தை உாயி பிரகாரம் செயற்படுத்துதல் வேண்டும். |
| (vi) | பேராதனை பல்கலைகழகத்தின் மூலம் கண்டறியப்பட்ட கெல்சைட் கனிப்பொருள்சார்ந்த புதிய உற்பத்திக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் அந்த பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்றமையும் அதனை கண்டறிந்து பயன்படுத்தும் வணிக ரீதியில் புதிய உற்பத்தி இலங்கையில் மேற்கொள்வதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவும் அந்த பல்கலைக்கழகம் கம்பனியுடன் பறிமாறிக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தமையும் 2021 சனவரி 29 ஆந் திகதிய | PGIS இற்கு சொந்தமான பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை PGIS மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகமாக இருந்ததுடன் Non Disclosure agreement (NDA) இற்காக கையொப்பம் இடுதல் பின்னர் ஆகும். தற்போது இந்த Non Disclosure agreement (NDA) தயாரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மற்றும் PGIS உடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதுடன் Non Disclosure agreement (NDA) இற்காக கையொப்பம் இட்டதன் பின்னர் PGIS பேடன்ட் அனுமதிப்பத்திரம் பரீட்சிக்க | பல்கலைக்கழக்திற்குச் சொந்தமான பெறுமதி சேர்க்கப்பட்ட 06 உற்பத்திகளுக்காக பேடன்ட் அனுபத்திரம் உள்ளதாக ஆரம்பத்தில் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | GSMBTS/SP/CA/2021/04 என்ற சுற்றாடல் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனி இந்த பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பாக பரீட்சித்திருக்கவில்லை. மேலும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் விஞ்ஞான நிறுவனத்தினால் இதற்குரிய பெறுமதி சேர்க்கப்பட்ட 06 உற்பத்திகள் உள்ளதாக அறிவித்திருந்த போதிலும் ஒரு உற்பத்திக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் உரித்தாக இருந்தமை மற்றும் எஞ்சிய 05 பேடன்ட் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருந்ததாக தேசிய புலமைச்சொத்து அலுவலகம் கணக்காய்விற்கு அறிக்கையிட்டிருந்தது. | முடியும். | | |
| (ஈ) | மன்னம்பிட்டி மணல் அகழ்வு செயற்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 8,883,520 பெறுமதியான லோடர் இயந்திரம் தொடர்பான சரியான தொழில்நுட்பம் 2017 யூலை 16 ஆந் திகதியில் இருந்து செயற்பாடற்று செயழிலந்து காணப்பட்டதுடன் இயந்திரம் தொடர்பாக சரியான தொழில்நுட்பம் மதிப்பீடு மேற்கொள்ளாமல் ரூபா 840,517 செலவில் எஞ்சின் பழுதுபார்த்தல் ஒன்று 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது இயந்திரம் செயல் இழந்த 04 வருடங்கள் வைக்கப்பட்டதன் பின்னர் 2022 மார்ச் மாதத்தில் இயந்திரத்தின் வழங்குனர் நிறுவனத்தில் இருந்து ரூபா 3,592,620 கிரயத்தில் பழுது பார்த்தலை பணிப்பாளர் சபை கிரயத்தில் அங்கீகரித்திந்தது. மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் இந்த லோடர் வண்டியை முகவர் நிறுவனத்தின் வெலிவேரிய பழுது பார்த்தல் தளத்திற்கு 2022 நவம்பர் மாதம் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு காலம் எடுத்தமை போன்ற விடயங்களின் காரணமாக பழுதுபார்த்தல் மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு சிறிது காலம் எடுத்ததாகவும் முகவர் நிறுவனம் அறிவித்திருந்தது.<br><br>அந்த மதிப்பீடுகளும் உடனடியாக கிடைத்தவுடன் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அங்கீகாரத்தை பெற்று உரிய பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு இந்த லோடர் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இயந்திரத்தை தாமதம் இன்றி பழுதுபார்த்து பயன்படுத்துதல் வேண்டும். | |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டில் மாதுறு ஓயா சார்ந்த அதாவது அமுல்படுத்தப்பட்ட அரகன்வில, போவத்த, படிவு மணல் செயற்திட்டங்களில் முறையே ரூபா 1,345,485 தொகை, 3,975,095 தொகை, ரூபா 97,541 மற்றும் மூதூர் மணல் செயற்திட்டத்தில் இருந்து ரூபா 3,216,621 நட்டம் பெறப்பட்டிருந்தது. | ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடியின் காரணமாக கொண்டு இந்த செயற்திட்டங்களின் கிரயம் கூறுகள் உயர்வடைந்து சென்றிருந்ததுடன் செயற்திட்டங்களின் மணல் விற்பனை விலையும் கவனத்தில் கொள்ளகூடிய அளவு உயர்வடைந்திருந்தது. மேலும் செயற்திட்டங்களில் அடைந்து கொள்வதற்கு மூலப்பொருள் தேவையான பிரதேசங்களில் காணப்படுகின்ற தூர அளவின் காரணமாகவும் மணலை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருகின்ற லொறி வண்டிகளின் அளவு வீழ்ச்சி அடைந்தமையும் காரணமாக இருந்தது. | செயற்திட்டம் நட்டத்தை பெறுதல் ஏனைய செயற்திட்டங்கள் தொடர்பிலும் பாதகமாக தாக்கமளித்திருந்தமையினால் இலாபகரமான நடவடிக்கைகளை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட 2001 யூன் 08 ஆம் திகதிய இலக்கம் PF/PE/COM/31 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் பதவியணியினர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய 05 முதல் 06 வரை வரையறுக்கப்பட்டடிருந்ததுடன் கம்பனிக்காக தேவையான ஏனைய ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 164 ஆன ஊழியர் தரப்பினர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றியிருந்ததுடன் நிரந்தர ஊழியர்கள் எவரும் கணக்காய்வு திகதி வரையும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | 60 ஊழியர்களுக்கு நிறுவனத்தில் அங்கீகாரம் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு முறைமையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு தற்போது சேவையாற்றுகின்ற மிகுதி ஊழியர்களின் ஒப்பந்த காலத்தின் நீடிப்பு சேவையினை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. நிரந்தர பதவியணியினரை சேர்ப்பதற்காகவும் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளுக்காகவும் உள்ளக மற்றும் வெளிவாரி விண்ணப்பதார்களிடமிருந்து விண்ணபப்பங்களை கோரி தகைமை பெற்றவர்களை சேர்ப்பதற்கு தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிய வெற்றிடங்கள் 2022.10.02 மற்றும் 2022.10.03 என்ற திகதிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை சபைக்கு சுற்றாடல் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றுகின்ற அங்கத்தவர் இதுவரை பெயரிடப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர பதவியணியினரை சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |